செ.வெ.எண் : 05/ செப்டம்பர் நாள் : 02.09.2021

# இராமநாதபுரம் மாவட்டம்

## புதிய தொழில் முனைவோருக்கு கடனுதவி பெற விண்ணப்பிக்கலாம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

படித்த, முதல் தலைமுறை தொழில் முனைவோர்கள் பயன்பெறும் வகையில் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தில் பயன்பெற பட்டம், பட்டயப்படிப்பு மற்றும் ஐ.டி.ஐ படித்த தொழில் துவங்க ஆர்வமுள்ளவர்களிடமிருந்து 2021-22 நிதியாண்டிற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், உற்பத்தி மற்றும் சேவை தொழில்கள் ஆரம்பிக்க குறைந்தபட்சம் ரூ. 10 லட்சம் முதல் அதிக பட்சம் ரூ. 5 கோடி வரையிலான தொழில் திட்டங்களுக்கு வங்கிக்கடன் பெற பரிந்துரைக்கப்படுகிறது.

விண்ணப்பிக்கும் நாளில் 21 வயது பூர்த்தியடைந்திருக்கவேண்டும், பொதுப் பிரிவினராய் இருப்பின் 35 வயதிற்கு மிகாமலும், சிறப்பு பிரிவினராய் (தாழ்த்தப்பட்ட/ பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட/ மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சிறுபான்மையினர், பெண்கள், முன்னாள் இராணுவத்தினர், திருநங்கையர் மற்றும் மாற்றுத்திறனாளிகள்) இருப்பின் 45 வயதிற்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். வருமான வரம்பு ஏதுமில்லை. மூன்று ஆண்டுகளாக தமிழ் நாட்டில் தொடர்ந்து வசிப்பவராகவும், முதல் தலைமுறை தொழில்முனைவோராகவும் இருக்க வேண்டும். பொதுப் பிரிவினராக இருந்தால் திட்ட மதிப்பீட்டில் சொந்த முதலீடு 10% ஆகவும் மற்றும் சிறப்பு பிரிவினராக இருந்தால் 5%ஆகவும் இருத்தல் வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் துவங்கப்படும் தொழில்களுக்கு திட்ட மதிப்பீட்டில் 25%அல்லது அதிக பட்சமாக ரூ. 50 லட்சம் மானியமும், 3% வட்டி மானியமும் வழங்கப்படும். பங்குதாரர் நிறுவனங்களும் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறலாம். கோவிட்-19 பெருந்தொற்று காரணத்தினால் 30.09.2021 வரை பயிற்சியின்றி மானியத்துடனான கடனை பெற்றுக் கொள்ளலாம்.

இத்திட்டத்தின் கீழ் புதியதொழில் முனைவோர்கள் தென்னைநார் கயிறு மற்றும் கயிறு துகள் கட்டிகள், மீன் வலைதயாரித்தல், ஜின்னிங் தொழிற்சாலை, முந்திரி பதப்படுத்துதல், குளிர்பதனக்கிடங்கு, மீன் பதப்படுத்தும் நிறுவனம், சிறுதானியங்களிலிருந்து உணவுப்பொருட்கள் தயாரிப்பு, கேக் மற்றும் பிஸ்கட் தயாரிப்பு, உணவுப்பொருட்கள் உற்பத்தி, அயோடின் உப்பு தயாரிப்பு, இரும்பு பர்னிச்சர் தயாரிப்பு, ஹலோபிளாக் தயாரித்தல், உலர் சாம்பல் செங்கல் தயாரித்தல், கருவேலமரத்துாளிலிருந்து தயாரிக்கப்படும் எரிப்பொருள் கட்டி தயாரித்தல், பிவிசி பைப் தயாரித்தல், பிளாஸ்டிக் பாட்டில்கள் தயாரித்தல், நோட்டுபுத்தங்கள் தயாரித்தல், அட்டைப்பெட்டிகள் தயாரித்தல், வாகன உதிரிபாகங்கள் தயாரித்தல், ஆயத்த ஆடைகள் தயாரித்தல், டிஜிட்டல் பிரிண்டிங், பிளக்ஸ் பேனர், போட்டோகலர் பிராஸிங் லேப், உலர் சலவையகம், நான்குசக்கர வாகன பழுது நீக்கும் நிலையம், வீல் அலையன்மெண்ட், மருந்துவ பரிசோதனை மையம் , கம்யூட்டர் பிபிஓ மையங்கள், அழகு நிலையம், மர அழகு வேலைப்பாடு (வுட் கார்விங்), கட்டுமான பொருட்கள் வாடகைக்கு விடுதல், நிலம் துார்வாரும் இயந்திரம் (ஜேசிபி) வாடகைக்கு விடுதல் போன்ற தொழில்கள் துவங்கலாம்.

எனவே, தொழில் ஆரம்பிக்க விரும்பும் முதல் தலைமுறை தொழில் முனைவோர் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட தொழில் மையத்தை நேரிலோ அல்லது 04567-230497 - என்ற தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்று www.msmeonline.tn.gov.in/needs என்ற இணையதள முகவரியில் விண்ணப்பித்து பயனடையலாம் என மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**